செய்தி வெளியீடு எண்: 020 நாள் : 11.01.2016

# திருக்குறள் இசை மாமழை – 50 மணி நேரம்

திருக்குறள் அள்ள அள்ளக் குறையாத கருத்துச் சுரங்கமாக இன்றும் நமக்கும், உலக மக்களுக்கும் பயன்பட்டு வருகிறது. திருக்குறளை ஓதுவது போதுமா ? திருக்குறளைப் பற்றி பேசுவது போதுமா ? எழுதுவது போதுமா ? என்பதைக் கடந்து, உலக வரலாற்றில் முதல் முறையாக 50 மணி நேரம் தொடர்ச்சியாக (ஒரு நாளில் 8–10 மணி நேரம்) 1330 குறள்களையும் 325 இராகங்களைக் கொண்டு இசை வடிவமாக வழங்க இசைப்பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்த ''இசைப்பேரொளி'' ''சித்திரவீணை'' திரு.என்.ரவிகிரண் அவர்கள் முன்வந்துள்ளார். இந்நிகழ்ச்சியை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் மூலம் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது .

பல்வேறு பண்களில் திருக்குறளை பல்வேறு கருவிகளோடு புதிதாக இசையமைக்க முன்வந்திருப்பது, உலக அரங்கில் தமிழுக்கும், திருக்குறளுக்கும் தனிப் பெருமை தருவதாக அமைந்துள்ளது.

பல பேர் திருக்குறளில் சில குறட்பாக்களை மட்டும் பல்வேறு இசை முறைகளில் இசையமைத்திருந்தாலும், அனைத்து குறட்பாக்களையும் ஒரே இசை சீர் வடிவில் திரு. ரவிகிரண் அவர்களால் தற்பொழுது இசையமைக்க இருப்பது தனிச் சிறப்புக்குரியதாகும். மேலும், இம்முயற்சி உலகளவில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கருநாடக இசை, இந்துத்தானி இசை, நாட்டுப்புற இசை, மேனாட்டு இசை ஆகியவை பல்வேறு பாங்குகளில் இணைந்து தொடர்ந்து 50 மணி நேரம் இசைக்கவிருப்பது மாபெரும் சாதனையாகும். இம்முயற்சி இவருக்கும், தமிழுக்கும், திருக்குறளுக்கும் தனிப்பெருமை சேர்ப்பதாகும்.

இந்த மாபெரும் சாதனைகளையெல்லாம் புரிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்திற்கும் வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**